// மின்னஞ்சல் வழியாக // HSS_HMs_Panel-2026//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க.எண். 23790/டபிள்யு1/இ1/2026, நாள்.06.05.2026

பொருள்: பள்ளிக் கல்வி -தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி - 01.01.2026 இல் உள்ளவாறு அரசு /நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதி வாய்ந்த முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை-1)/ அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் 4% இட ஒதுக்கீடு அடிப்படையில் மாற்றுத் திறனாளி முதுகலைப் பாட ஆசிரியர்கள் - தேர்ந்தோர் பட்டியல் - தயார் செய்யக் கருத்துருக்கள் கோருதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண். 14, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள். 30.01.2020.
2. அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள். 17.12.2021
3. W.P.No.17632/2022 etc.தொகுப்பு வழக்குகளின் மீதான நீதிமன்ற தீர்ப்பாணை நாள். 29.08.2022.
4. C.P.(civil) Diary No(s).6415/2021 INSLP(c)No.2886/2016 தீர்ப்பாணை நாள். 18.04.2023.
5. சென்னை-6, ஆசிரியர் தேர்வு வாரியம் தலைவர் கடிதம் ந.க.எண்.4965141/CV3-S2/2023 நாள்.13.05.2024
6. அரசாணை (நிலை) எண். 06, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை (DAP-3.2) நாள்.21.06.2025.

******

01.01.2026 நிலவரப்படியான அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, கீழ்க்காண் விவரங்கள் கோரப்படுகிறது.

<u>அ) முதுகலை ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்</u>

1. 2006-2007 ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நியமனம் செய்யப்பட்டு முதுகலைப் பாட ஆசிரியர்கள் / முதுகலை மொழி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் (நிலை-1) ஆகியோரின் தெரிவுப் பட்டியல் மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்விற்கு தகுதி வாய்ந்தவர்களை மதிப்பெண் அடிப்படையில் சரிபார்த்து முன்னுரிமைப்படி அனுப்ப வேண்டும். (உச்சநீதிமன்ற தீர்ப்பாணையின்படி போட்டித் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தர எண் நிர்ணயித்து முதுகலை ஆசிரியர்கள் அனைவருக்கும் 2005-2006 ஆம் ஆண்டுக்கான

தெரிவுப்பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் பின்பற்றிடல் வேண்டும்.)

2. கருணை அடிப்படை மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் விவரம்.

3. முந்தைய ஆண்டுகளில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெறாமல், 01.01.2026 அன்றைய நிலவரப்படி தயார் செய்யப்படும் தேர்ந்தோர் பட்டியலுக்கு தகுதி பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்கள்.

4. ஏற்கனவே, 01.01.2022 நிலவரப்படியான அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு, தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 Panel Years) நிறைவு செய்துள்ள முதுகலை ஆசிரியர்கள்.

**ஆ) அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சார்பான விவரங்கள்**

2015–2016 ஆம் ஆண்டு/அதற்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெற்றவர்களை தவிர மீதமுள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விவரங்கள். ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, 01.01.2022 நிலவரப்படி தற்காலிக உரிமை விடல் செய்து முழு மூன்று ஆண்டு தேர்ந்தோர் பட்டியல் ஆண்டுகள் (3 panel years) நிறைவு பெற்றுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் விவரங்கள்.

01.01.2016 க்குப் பிறகு முதுகலை ஆசிரியர்களை அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு/பணி மாறுதலுக்கு முன்னுரிமைப்பட்டியலில் சேர்க்கக் கூடாது என்றும், பட்டதாரி ஆசிரியர்கள் (Feeder Category) மட்டுமே சேர்க்கப்பட வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் W.A.(MD) No.1468/2017, etc., batch cases தீர்ப்பாணை நாள்.23.03.2023 இன்மீது உச்சநீதிமன்றத்தில் அரசால் CMP தாக்கல் செய்யப்பட்டு SLP Diary No.47685/2023 பெறப்பட்டும், மற்றும் SLP (c) No.3336/2024 filed by Pon Selvaraj and Others நிலுவையில் உள்ளதால், 01.01.2016க்குப் பின்னர் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு/பணி மாறுதல் பெற்ற முதுகலை ஆசிரியர்களை தரம் இறக்க வேண்டுமா அல்லது அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியில் தொடரலாமா என்பதற்கான தீர்ப்பாணை பெறப்பட்ட பின்னரே இப்பொருள் சார்ந்து முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

01.01.2023, 01.01.2024 மற்றும் 01.01.2025 நிலவரப்படியான முன்னுரிமைப் பட்டியல்களின்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலையாசிரியர்களுக்கு 2:7 ratio அடிப்படையில் பணியிடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தீர்ப்பு பெற்ற பிறகே 01.01.2016 க்குப் பிறகு அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை அரசு

மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் முன்னுரிமைப்பட்டியல் தயாரிக்க இயலும் என்பதால் இது குறித்த விபரங்கள் தனியே பின்னர் கோரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**இ) 4% இட ஒதுக்கீடு அடிப்படையில் மாற்றுத் திறனாளி முதுகலைப் பாட ஆசிரியர்கள் சார்பான விவரங்கள்**

பார்வை (6)ல் காணும் அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016ன் கீழ் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை 21.06.2025 அன்று வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதால் அதன்படி 01.01.2026 நிலவரப்படியான முன்னுரிமை பட்டியல் அமையவேண்டும்.

மேலும், மேற்காண் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016ன் பிரிவு 34(1)ன் படி, ஒவ்வொரு தகுதியான அரசு நிறுவனங்களிலும், ஒவ்வொரு பதவி குழுவிலும் மொத்த பணியிடங்களின் குறைந்தது 4% மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். அதன்படி, கீழ்க்கண்ட வகைப்படி ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(a) பார்வை இழப்பு மற்றும் குறைந்த பார்வை (Blindness and low vision) – 1%

(b) கேள்வித்திறன் குறைபாடு (Deaf and hard of hearing) – 1%

(c) உடல் இயக்க குறைபாடு (Locomotor disability including – cerebral palsy, dwarfism, acid attack victims, muscular dystrophy உட்பட) – 1%

(d) அறிவுத்திறன் குறைபாடு, குறிப்பிட்ட கற்றல் குறைபாடு, மனநோய் (Autism, intellectual disability, specific learning disability and mental illness) – 1%

(e) மேற்கண்ட (a) முதல் (d) வரை உள்ள பல மாற்றுத் திறன்கள் (multiple disabilities), deaf-blindness உட்பட

எனவே, மேற்கண்ட விதிமுறைகளின் அடிப்படையில், பள்ளிக் கல்வித்துறையில் 01.01.2026 நிலவரப்படி உரிய கல்வித் தகுதியும் துறைத்தேர்வில் தேர்ச்சியும் பெற்றுத் தற்போது பணிபுரிந்து வரும் மாற்றுத் திறனாளி முதுகலைப் பாட ஆசிரியர்கள் குறித்து, 2010-2011ஆம் ஆண்டுகள் வரை பணியில் சேர்ந்தவர்களைச் சார்ந்த முழுமையான விவரங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தற்போது 01.01.2026 நிலவரப்படியான அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் முன்னுரிமைப் பட்டியலில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 15.05.2026 -க்குள் டபிள்யு-1 பிரிவு மின்னஞ்சலில் (w1dsetn@gmail.com) அனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்விற்கு அரசாணை நிலை எண். 14 பள்ளிக்கல்வி (பக2(1)) நாள்.30.01.2020 இல் Annexure, reffered to in rule 7 (a) இல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட துறைத்தேர்வுகள் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

1. Tamil Nadu Government Office Manual Test
2. Account test for Executive Officers (Or) Account test for Subordinate officers part I
3. Tamil Nadu School Education Department Administrative test Paper –1
4. Tamil Nadu School Education Department Administrative test Paper –II

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்க கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மற்றும் தண்டனை பெற்றுள்ள முதுகலை ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பதவி உயர்விற்கு பரிந்துரைக்கப்படும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விரும்பும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் கருத்துருக்களை மட்டும் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்பப்பட வேண்டும். அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் **மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பமுடையவர்கள்** சார்பான **கருத்துருக்களை** பள்ளிக் கல்வி இயக்குநருக்கு **பரிந்துரை** செய்யப்பட **வேண்டியதில்லை**. அத்தகைய தலைமையாசிரியர்களின் விருப்பக் கடிதத்தினை மட்டும் அனுப்பினால் போதுமானது.

மேலும், அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களைப் பொறுத்தமட்டில் அரசாணையின்படி, மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளிப்பது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு பதவி உயர்வில் செல்ல அளிக்கப்படும் விருப்பக் கடிதமே இறுதியானது. அதனை மீண்டும் ஒரு முறை மாற்றி அமைத்திட இயலாது. ஆகையினால் மாவட்டக் கல்வி அலுவலராக (அல்லது) அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வில் செல்வதற்கு அளிக்கப்படும் விருப்பக் கடிதத்தினை

ஆழ்ந்து சிந்தித்து சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அளிக்க அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், மேலும் மாவட்டக் கல்வி அலுவலராகப் பதவி உயர்வில் செல்ல விருப்பக் கடிதம் அளித்தவர்களுக்கு மாவட்ட கல்வி அலுவலராகவும், அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு கோரும் அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அரசுமேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகவும் பதவி உயர்வு பெற விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சார்ந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக .05.2026 அன்று சிறப்பு முகாம் நடத்தி அறிக்கை அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், 01.01.2026 நிலவரப்படி அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்விற்குத் தகுதியான முதுகலைப் பாட ஆசிரியர்கள், முதுகலை மொழி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர் (நிலை-1) மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் ஆகியோரின் விவரங்களும், 4% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் மாற்றுத் திறனாளி முதுகலைப் பாட ஆசிரியர்களின் விவரங்களும், உரிய ஆவணங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களுடன், கருத்துருக்களுடன் கூடிய தேர்ந்தோர் பட்டியலை கவனமாக ஆய்வு செய்து, தகுந்த பரிந்துரைகளுடன் இவ்வியக்கத்திற்கு அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு-

1. முதுகலை ஆசிரியரின் விவரங்கள் சார்ந்த படிவம்
2. Access Sheet
3. Teachers Recruitment Board (TRB) மூலம் 2006-2007 ஆண்டிற்கான மதிப்பெண் அடிப்படையிலான ( Merit Basis) தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல்

பள்ளிக்கல்வி இயக்குநர்

06.05.2026 4/5

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழி)

நகல்:

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை- 600 006 - அவர்களுக்கு தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3. சென்னை 5, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிவுடன் அனுப்பப்படுகிறது.